2014

# காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு

## போக்குகள், நடைமுறைகள் மற்றும் தாக்கங்கள

ஒரு திறனாய்வுமாற்றுக்
கொள்கைகளுக்கான நிலையம

# ஒரு திறனாய்வு

காணாமற்போனவர்கள் தொடர்பான
முறைப்பாடுகளை விசாரணை செய்யும்சனாதிபதி ஆணைக்குழு
போக்குகள், நடைமுறைகள், மற்றும் தாக்கங்கள்

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**

டிசம்பர் 2014

CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

மாற்றுக் கொள்கைகளுக்கானநிலையமானது (CPA), ஆளுகை மற்றும் முரண்பாட்டுத் தீர்வு பற்றிய விடயங்கள் தொடர்பானவற்றில் கவனஞ் செலுத்துகின்ற சுயாதீனமான, பாரபட்சமற்ற அமைப்பாகும். இது 1966 இல் உருவாக்கப்பட்டது. சிவில் சமூகத்தின் துடிப்பான பொது விவாதத்துக்கான பங்களிப்பு வலுவூட்டப்பட வேண்டும் என்பதை உறுதியாக நம்புகிறது. பொதுக் கொள்கை விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு மாற்று வழிகள் இனங்காணப்பட்டு பலரும் அறியச் செய்யப்பட வேண்டும் என்பதில் (CPA) தன்னை அர்ப்பணித்துள்ளது.

விலாசம்: 24/2, 28ம் ஒழுங்கை, ∴ பிளவர் வீதி, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: +94(11)2565304/5/6
தொலைநகல்: +94(11)4714460

இணையம்: www.cpalanka.org
Facebook: www.facebook.com/cpasl
Twitter: www.twitter.com/cpasl@cpasl
மின்னஞ்சல்: info@cpalanka.org

காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு 2013 ஆகஸ்ட் மாதம் 15ந் திகதி 1823 / 42ம் இலக்க அரச வர்த்தமானி மூலம் நிறுவப்பட்டது. பணிப் பாணை கிடைக்கப் பெற்று ஓராண்டு காலம் கழிந்த பின்னரும் இத்தருணம் வரையில் இலங்கையில் உண்மையைத் தேடிச் செல்லல், நியாயம் மற்றும் வகைகூறல் தொடர்பான பாரதூரமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்ற சூழ்நிலையிலேயே இந்த ஆணைக் குழு கருமமாற்றிக் கொண்டிருக்கிறது. ஆணைக்குழுவைப்பற்றி இலங்கை அரசாங்கம் விபரிப்பது காணாமற் போனவர்களின் குடும்பங்களில் உள்ளோரின் மனக் கிலேசங்களுக்குத் தீர்வு காணும் உபகரணமாக மட்டுமன்றி அதன் பணிப்பாணை பரவலாக்கப்பட்டதிலிருந்து யுத்த காலத்தில இடம்பெற்ற சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதநேய சட்ட மீறல்கள் தொடர்பாகவும் தீர்வு வழங்கும் ஒரே பொறி முறையாகவும் அரசினால் இந்த ஆணைக் குழு ஏனைய விடயங்களுக்கு மத்தியில் அறிமுகப்படுத்தப்டுகிறது.

ஆணைக்குழுவினால், நடாத்தப் பெற்ற பொதுமக்கள் அமர்வுகளின் போது அவதானிக்கப்பட்ட கேந்திரமான பிரச்சினைகள் மற்றும் போக்குகள் போலவே தற்போது செயற்படும் செய்முறை அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அவை தொடர்பாக தாக்கங்களுக்கான மக்களினதும் சிவில் சமூகத்தினதும் கருத்தோட்டங்களும் மாற்றுக் கொள்கைளுக்கான நிலையத்தினால் முன்வைக்கப்படும் இப்புறனாய்வினுள் உறைந்துள்ளன.விசாரணை செய்யும் ஆணைக்குழு எனப்படும் ஆய்வுக்கருவியின் கீழ் இயங்கும் இந்த ஆணைக்குழு, கட்டமைப்பு ரீதியாகவே கோளாறுகளுக்கு உட்பட்டதென்பதை மாற்றுக் கொள்கைகளுக் கான நிலையம் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தது.ஏனெனில், இந்த ஆணைக் குழுவுக்கான உறுப்பினர் நியமனம், நிதி ஒதுக்குதல் மற்றும் பின்தொடர்வு நடவடிக்கை ஆகிய அனைத்துக்குமே நிறைவேற்று அதிகாரத்தின் மீது தங்கியிருந்தது. மனித உரிமை மீறல் தொடர்பில்,நியாயத்தை நிலை நாட்டலுக்காக அண்மைக் காலங்களில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அநேகமான முன்னெடுப்புக்கள் தோல்வி யடைந்தமை, தொடர்ந்து வந்த அரசாங்கங்களினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களில் முன்னேற்றம் ஏதும் இல்லாமை என்பவற்றை அவதானித்த மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், உண்மையைநாடிச் செல்லல், நியாயத்தையும் பொறுப்புக் கூறலையும்கொண்ட உள்ளக செயற்பாட்டை வழங்கும் நீதிசார்ந்த கொள்கை ரீதியான திருத்தங்களுக்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்கும்படியாகவே கேட்டுக் கொள்கிறது. இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குத் தவறுதல், யுத்தத்துக்குப் பின்னரான சூழமைவில் உள்ளகச் செயற்பாடுகளின் மூலம் மனக்கிலேசங்களுக்குத் தீர்வு காண இயலாமையை மேலும் உறுதி செய்வதுடன் சர்வதேச விசாரணைகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு மேலும் வலுவூட்டும்.

இச்சாராம்சம் மூன்று பகுதிகளைக் கொண்டது. தற்போதைய ஆணைக்குழுவின் **தொழில்நுட்ப பிரச்சினைகள்**தொடர்பில் கண்ணோட்டம் செலுத்தியவாறு ஆணைக்குழுவின் நடவடிக்கைச் செயற்பாடுகளையும் நடைமுறைகளையும் முதலாம் பகுதி திறனாய்வு செய்கிறது. ஆணைக்குழு செயற்படுகின்ற கட்டமைப்புக்குள் உட்பொதிந்துள்ள **பரந்தளவான பிரச்சினைகளை** இரண்டாம் பகுதி துருவி ஆய்வு செய்கிறது. **போக்குகள், அறிந்து கொள்ளப்பட்ட விடயங்கள் மற்றும் கவனத்திற்குள் கொள்ளப்பட வேண்டியவை** என்பனவும், ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்கு அவற்றினால் நேரக்கூடிய தாக்கங்கள் என்பன மூன்றாம் பகுதியின் மூலம், பகுப்பாய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

## தொழில் நுட்பப் பிரச்சினைகள்

ஆரம்பத்திலேயே கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பிரச்சினை,**ஆணைக்குழுவின் பொதுமக்கள் அமர்வும் அவ்வாறான அமர்வுகள் தொடர்பாகப் போதுவான விழிப்புணர்வின்மையுமாகும்.** ஆணைக்குழு அதே மாவட்டத்தில் அதன் இரண்டாம் சுற்றில் பொதுமக்கள் அமர்வு நடைபெற்ற போதிலும் கூட புதிதாக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டதிலிருந்து இது தெளிவாகிறது[1]. முறைப்பாடு களைக் கையளிக்கும்படி செய்யப்பட்ட அறிவித்தல்கள், முறைப்பாடுகள் செய்யும் செய்முறை மற்றும் ஆணைக்குழுவின் பொது மக்கள் அமர்வு பற்றி அறியச் செய்தல் ஆகியவற்றை தாக்கங்களுக்கு உள்ளாகியிருக்கும் பலருக்கு அறியக் கிடைக்காமலிருந்தமை இதன் மூலம் தெளிவாகிறது. இதற்கமைய, ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து அறியாமையினால் ஆணைக்குழுவினால் முறைப்பாடுகளைக் கையேற்ற சந்தர்ப்பமும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொது மக்கள் அமர்வுகள் இடம் பெற்ற சந்தர்ப்பமும் ஆகிய முறைப்பாடுகளைப் பதிவு செய்ய இருந்த இரு வாய்ப்புக்களும் தவறிப்போயிருந்தவர்களுக்கான தீர்வு யாதென்ற பிரச்சினைகளுமே எஞ்சியுள்ளன.

ஆணைக்குழு பற்றியும் அதன் பணிப்பாணை குறித்தும் போதுமானளவு விழிப்புணர்வின்மையினால் இப் பிரச்சினை இன்னமும் சிக்கலாகியுள்ளது. மாவட்டமொன்றில் ஆணைக்குழு மக்கள் அமர்வுகளை இரண்டு தடவைகள் நடாத்திய சந்தர்ப்பங்களில், முதல் அமர்வின் போது வருகை தந்து விடயங்களைச் சமர்ப் பித்த சில நபர்கள்,அந்த ஆணைக்குழுவே அறிந்திராத வகையில் மீண்டும் விடயங்களைச் சமர்ப்பிப்பதற்

[1] இதுவரையில், மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்தைத்தீவு அகிய மாவட்டங்களில், ஆணைக்குழு இரண்டாம் சுற்று மக்கள் அமர்வுகளை நடாத்தியுள்ளது. ஆணைக்குழுவின் இணையதளத்தில் குறிப்பிடப்புட்டுள்ள அதன் சொந்த அறிக்கைகளுக்கமைய ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் முறையே 213, 106, 166 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசச் செயலகத்துக் ஆணைக்கு இதற்கு முன்னர் சென்றிருந்த போதிலும் இப்பிரதேசத்திலிருந்துபுதிய முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக ஆணைக்குழு அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் புதிய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

காக இரண்டாம் தடவையும் வருகை தந்துள்ளனர் என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அறிந்து கொண்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் ஒரு அமர்வின் போது சில நபர்கள் பிரதேசச் செயலகமொன்றில் ஆணைக்குழு பொது மக்கள் அமர்வொன்றை நடாத்தும் போது அதில் சமூகமளித்து விட்டு,ஓரிரு தினங்களுக்குப் பின்னர் இன்னுமொரு பிரதேசச் செயலக மொன்றில் ஆணைக்குழு பொது மக்கள் அமர்வொன்றை நடாத்தும் போது அதிலும் சமூகமளிக்க வருகை தந்துள்ளனர்[2]. மாற்றுக் கொள் கைகளுக்கான நிலையத்தினால் வடக்கிலும் கிழக்கிலும் நிகழ்த்திய கருத்துக் கணிப்புக்களின்போது கண்டறியப்பட்ட விடயம் யாதெனில், தாக்கங்களுக்குள்ளான மக்கள் ஆணைக்குழுவின் பணிப்பாணை யைப் பற்றியோ ஆணைக்குழுவைப் பற்றியோ அறிந்திராமல் இருந்திருக்கின்றனர் என்பதாகும்.எனவே தம் நடவடிக்கைகளைப் போலவே தாம் விடையளிக்க உத்தேசிக்கும் பிரச்சினைகள் மற்றும் பொதுமக்கள் அமர்வுகள் தொடர்பாகவும் ஆணைக்குழு பொது மக்களை விழிப்புணர்வு அடையச் செய்ய வேண்டியுள்ளது. முதலாம் சுற்றின் பொது மக்கள் அமர்வு கடந்த ஆண்டு ஜனவரி மாதம் இடம் பெற்ற போதிலும் ஆணைக்குழுவினால் 2014ம் ஆண்டுக்குள் ஒன்பது பொது மக்கள் அமர்வுகள் நடத்தியிருந்த போதிலும் தெளிவான எதிர் நோக்கு ஒன்றை உருவாக்குவதற்கு அதற்கு இன்னமும் முடியாதுள்ளது[3]. தனது எதிர் கால நடவடிக்கை தொடர்பாக எதிர்நோக்கு ஒன்றை உருவாக்குவதற்கு, ஆணைக்குழு துரித நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தனது பிறப்பாணை குறித்து பொது மக்களை விழிப்புணர்வடையச் செய்தல் வேண்டும்.

1984 போன்ற மிகத் தொலைவான காலத்திலிருந்து யுத்தத்தின் இறுதிக் காலம் வரையிலும் 2009 மே மாதம் 19ம் திகதியின் பின்னரும் நிகழ்ந்த காணாமற் போனவர்கள் தொடர்பாகவும் முறைப்பாடுகள் ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ளன. காணாமற் போன தமது உறவினர்கள், அன்புக்குரியவர்களைத் தேடி இதற்கு முன்னரும் இவ்வாறான பல முன்னெடுப்புக்களுக்குத் தாம் சென்றிருப்பதாக ஆணைக்குழுவின் அமர்வுகளுக்கு வருகை தந்த எத்தனையோ பேர் குறிப்பிட்டிருந்தனர். **ஆணைக்குழு மிகவும் மந்த கதியில் இயங்குவதாக**[5]உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தியவாறு[4] வலியுறுத் திய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், இந்த ஆணைக்குழு தமக்குக் கிடைத்துள்ள முறைப் பாடுகளைக் கேட்டு முடிப்பதற்கு மட்டும் (விசாரிப்பதற்கு அல்ல) 13 ஆண்டுகள் எடுக்கும் என்று எடுத்துக் காட்டியது. இதுவரையில் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் தொகை 20,000 எண்ணிக்கையைத் தாண்டியுள்ள போதி லும் ஆணைக்குழு இதுவரையில் செயற்பட்டுள்ள வேகத்தைக் கருத்தில் கொள்ளும் போது ஆணைக்குழு வினால் இந்த முறைப்பாடுகளைக் கேட்டு முடிப்பதற்காக **தற்போது அனுசரிக்கப்படும் முறையியலில் மாற்றமொன்றை** ஏற்படுத்துவதற்கான காலம் வந்துள்ளது. பொது மக்கள் அமர்வொன்றில் திரட்டப்படும் தகவல்களை கணினிமயப்படுத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு ஐந்து வாரகாலம் எடுக்கும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு அறியக்கிடைத்தது[6]. முறைப்பாடு களை கணினிமயப்படுத்துவதற்காக இதனைவிடச் சிறப்பான வினைத்திறன்மிக்க முறையியலொன்றைக் கைக்கொள்ள வேண்டும் என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது. ஒரே தரவு இரண்டு முறை உட்படுத்தப்படாத விதத்தில் பார்த்துக் கொள்ள வேண்டியதுடன், முறைப்பாடுகள் தொடர் பான விபரங்களையும் தனியாள் ஆய்வு அறிக்கைகளையும் ஆணைக்குழுவுக்கும் அதன் செயலணி யினருக்கும் மீண்டும் பரிசீலனை செய்யக்கூடிய வினைத்திறன் மிக்க மற்றும் கணினிமயத் தரவுகள் கொண்ட புதிய பொறிமுறையொன்றை உபயோகித்தல் வேண்டும். ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் தகவல்களை எண்ணியல் முறைக்கு மாற்றக்கூடிய ஆற்றலுடைய, இலகுவில் அணுகக் கூடிய தொழில் நுட்ப முறையில் ஆணைக்குழு முதலீடு செய்தல் வேண்டும். முன்னேறிச் செல்லும் போது ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக,ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகளை ஆவணப் படுத்து வதற்கும் பின்தொடர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்,கணினிமயப் படுத்தல் மற்றும் எண்ணியல் தொழில்நுட்பத்தின் மூலம் குரலொலிப் பதிவுகள்நிழற்படங்கள், கடிதங்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் பத்திரிகைக் கட்டுரைகள் போன்றவற்றை ஸ்கேன் செய்யும் முறைகளைப் பயன்படுத்தல் என்பன தொடர்பாகக் கருதப்படல் வேண்டும். அவ்வாறான முன்னெடுப்பக்களைக் கைக்கொள்வதற்கு ஆணைக் குழு காட்டும் விருப்பமின்மை அல்லது இயலாமையின் காரணத்தினால் முற்படும் பிரச்சினைகளுக்கு மெய்யான விடைகளைத் தேடல் தொடர்பாக எதிர்பார்ப்புக்களை வைத்துக் கொள்ளமுடியாமலுள்ளது. மேலும், விருப்பமின்மை அல்லது இயலாமையின் காரணமாக ஆணைக்குழுவினால் தமக்குக் கிடைத்துள்ள பணிப்பாணைக்கு அமைய செயற்படும்போது நிகழுகின்ற வினைத்திறன் மிக்க மற்றும் பயனுறுதியான நடவடிக்கைகளுக்கு கண்டிப்பாக ஊறுவிளையும்.

[2] முழங்காவில் பிரதேசச் செயலகப் பிரிவில் இடம்பெற்ற பொது மக்கள் அமர்வில் முறைப்பாடுகளை முன்வைத்த நபர்கள் பூநகரி பிரதேசச் செயலகப் பிரிவில் இடம் பெற்ற பொது மக்கள் அமர்வுக்கும் வந்திருந்தனர். இவ்விரு தருணங்களும் 2014 செப்டம்பர் மாதம் ஆணைக்குழுவினால் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாம் சுற்றில் பொது மக்கள் அமர்வுகள் இடம் பெற்ற சந்தர்ப்பங்களாகும்.

[3] முன்செல்வதற்கான உறுதியான முன்நோக்கிற்கான தேவையை மாற்றுக் கொள்கைக்கான நிலையம் இதற்கு முன்னரும் வலியுறுத்தியுள்ளது. CPAமார்ச் 2014 ஐ பார்த்துக் கொள்க:,"A Commentary on the Presidential Commission to Investigate Missing Persons during the periods of June 1990-May 2009 in the Northern and Eastern provinces", :http://www.cpalanka.org/a-commentary-onthe-presidential-commission-to-investigate-missing-persons/

[4] 11/09/2014 வரையிலான ஆணைக்குழுவின் தகவல்கள் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் Infographic இல் பயன்படுத்தப்பட்டுள்ள புள்ளி விவரங்கள்

[5] மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் Infographic: காணாமற் போனவர்கள் பற்றிய சனாதிபதி ஆணைக்குழு, 2014 செப்டம்பர் 14ஐப் பார்த்துக் கொள்க.

[6] ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் செயலாளருடனான மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் சந்திப்பு 29.'.10.'.2014

ஆணைக்குழுவின்பொது மக்கள் அமர்வு நடைபெறும் சந்தர்ப்பங்களில் இடம் பெறும் மொழி பெயர்ப்புக்களின் பண்புத்தன்மையானது, முறைப்பாடுகளை விசாரணை செய்யும் நடவடிக்கைகள் இடம் பெற்ற காலம் முழுவதும் மீண்டும் மீண்டும் நிகழ்ந்த ஒரு பிரச்சினையாகும். இப்பிரச்சினை பல சந்தர்ப்பங்களிலும் மேலெழுந்தபோதும்[7] அதற்குப் பரிகாரமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பொதுவாக ஆணைக்குழு முறைப்பாடுகளை விசாரிக்கும் மூன்றரை நாள் கால அவகாசத்தின் போது, முதியவர்கள் இருவர், முழுநேரமாகக் கடமையாற்றினர். பொது மக்கள் அமர்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் மொழிபெயர்ப்பின் பண்புத்தன்மையில் ஒருங்கிசைவு இல்லாமையும் இந்த நிலைமையும் ஆணைக்குழுவினால் திரட்டப்பட்ட அனைத்துத் தகவல்களும் அதன் ஒட்டுமொத்தமான நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்துவதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் அவதானிக்கப்பட்டது. மேலும் வவுனியாவில் இடம்பெற்ற இறுதி யான பொது மக்கள் அமர்வின் போது ஒரு மொழிபெயர்ப்பாளர், ஆணையாளர்களால் வினாக்களைத் தொடுக்கும் வரை காத்திராது, தாமாகவே வினாக்களைக் கேட்ப தற்கு ஆரம்பித்தமை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் அவதானிக்கப்பட்டது[8]. கடந்த காலங்களில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்புடைய பிரச்சினைகள் பற்றிய வினாக்களைக் கேட்பதற்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவரிடமுள்ள தேர்ச்சியும் அச்சந்தர்ப்பத்தில் அந்த இடத்தில் இருந்த ஆணையாளர் அவ்வாறான பழக்கங்களுக்கு ஏன் இடமளித்தார் என்பவை அடங்கிய பிரச்சினைகள்இவ்வாறான நடைமுறைகளினால் மேலெழக் காரணமாகின. **ஆணைக்குழுவின் முன் சமர்ப்பிக்கப்படும் நிகழ்வுகள் தொடர்பான முக்கிய பிரச்சினைகள் மற்றும் தாக்கங்களுக்குள்ளான பிரதேசங்கள் பற்றி மொழி பெயர்ப்பாளர் மற்றும் ஆணையாளருள் காணப்பட்ட சூழமைவு தொடர்பான அறிவின்மையும்** குறிப்பிடத்தக்கது.சில சந்தர்ப்பங்களில் மொழிபெயர்ப்பில் உள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டவும், சாட்சியமளிப்பவர் உண்மையிலேயே எதனைத்தான் கூறுகிறார் என்பதை ஆணைக்குழுவுக்கு எடுத்துக்காட்டவும் பொது மக்கள் அமர்வின் போது சமூகமளித்திருந்த சிவில் அமைப்புக்களின் உறுப்பினர்களுக்கும் ஊடகவியலாளருக்கும் வேண்டியிருந்தது. பொது மக்கள் அமர்வுகளை நடாத்த முன்னர்,அதற்கான முன்னாயத்தம் செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது. சூழமைவையும், ஆணைக்குழுவின் முன்னர் சமர்ப்பிக்கப்படும் நிகழ்வுகளையும் பற்றி நன்கு விளங்கிக் கொள்வதற்காக ஆணைக்குழுவின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் செயலமர்வு நடைபெறுவதற்கு முன் சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் குழுக்களைச் சந்திக்க வாய்ப்பளிப்பது இதனுள் உள்ளடங்கும். தமது உறவினர் காணாமற்போனது குறித்து மீண்டும் விபரிக்கும் போது சாட்சியாளருக்கு திரும்பத் திரும்ப மன வேதனைக்கு முகங்கொடுக்க நேரிடல் இதன் மூலம் குறையலாம். அவ்வாறே உண்மையைத் தேடவும் நியாயத்தை அடையவும் ஆணைக்குழுவுக்கு உண்மையிலேயே அக்கறை உண்டென்பதை மற்றையோர் விளங்கிக் கொள்ளவும் முடியும்.

ஆணைக்குழுவின் பணிப்பாணை விரிவாக்கப்பட்டதுடன், புதிதாகச் சேர்ந்த வினாக்களுக்குப் புறம்பாக, அவ்வாணைக்குழுவினால் **கேட்கப்படும் வினாக்களுள் பெரும்பாலானவற்றுகான விடைகள் அவர்கள் ஒவ் வொருவரதும் முறைப்பாடுகள் தொடர்பாகவும் பேணப்படும் கோவையில் ஏற்கனவே வைக்கப்பட்டுள் ளன.**காணாமற் போனவரின் அடையாளம், முறைப்பாட்டை முன்வைப்பவருடனான உறவு,எந்த நிலையில் அவர் காணாமற் போனார், யாரைக் குற்றுஞ் சாட்டுகிறார்கள், அவ்வாறான குற்றச்சாட்டுகளை உறுதிப் படுத்துவதற்கான சாட்சியங்கள் போன்ற அடிப்படையான வினாக்களுக்கான விடைகள் எல்லா கோவை களுக்குள்ளும் இருப்பதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துக்கு அறியக் கிடைத்துள்ளது[9]. தரப்பட்டுள்ளதகவல்கள் சரியானதா என்பதை திரும்பத் திரும்ப உறுதி செய்துகொள்வதற்கு ஆணைக் குழுவுக்கு உள்ள அக்கைறையை விளங்கிக் கொள்ள முடியுமாக இருந்த போதிலும் சில நிகழ்வுகள் தொடர் பாக பொதுமக்கள் அமர்வுகளில் கேட்கப்பட்டதும் அவ்வாறான வினாக்கள் மாத்திரமே என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் கொண்டது. ஒரே வினாவை மீண்டும் மீண்டும் கேட்டு விடைகளைத் தேடுவதைக் குறிக்கோளாகக் கொண்ட செயல் முறையினால் எப்பிரயோஜனமும் அதிகரிக்கப்படப் போவதில்லை.உண்மையிலேயே ஆணைக்குழு செய்யவேண்டியது யாதெனில், பிரச்சி னைக்கு இரையானவர் காணாமற்போன நிலைமை தொடர்பாக பின்தொடர் கேள்விகளை மீண்டும் மீண்டும் கேட்டவாறு ஆழமாக விசாரிப்பதாகும்.இந்த நடைமுறையை மீண்டும் கருத்தில் கொண்டு வினைத்திறனும் பயனுறுதியும் கொண்ட விசாரணைக்கு வழியமைக்கும் தரத்துக்கு இசைவாகும் விதமாக கேள்விக்கொத்தை தயார் செய்வதற்கு ஆவனசெய்யுமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆணைக் குழுவை வலியுறுத்துகிறது.

கவனத்தில் கொள்ள வேண்டிய இன்னொரு விடயம்,ஆணைக்குழுவினால் உபயோகிக்கப்படும் **வினாக்கொத்தினுள் காணாமற்போனமை தொடர்பில் அவதானம்** செலுத்தப்பட்டுள்ள விதமாகும். ஆணைக் குழு வின் பணிப்பாணை பரவலாக்கப்பட்ட பின் காணமாமற்போனமைக்குப் புறம்பாக உள்ள விடயங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவுக்கு அனுமதி கிடைக்கிறது.

---

[7]மாற்றுக் கொள்கைக்கான நிலைய வெளியீடு: காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் விசாரண நடவடிக்கைகள் தொடர்பாக நிலவும் பிரச்சினைகள் (Concerns on the Proceedings of the Presidential Commission to Investigate into Complaints Regarding Missing Persons), 2 அக்டோபர் 2014, :http://www.cpalanka.org/concerns-on-the-proceedings-of-the-presidential-commission-to-investigate-into-complaints-regarding-missing-persons/

[8]வவுனியாவில் நிகழ்ந்த பொதுமக்கள் அமர்வில் - 16 டிசம்பர் 2014

[9]ஆணைக்குழுவினால் தரவுகளைத் திரட்டும்படிவத்திலிருந்துபெறப்பட்ட வினாக்களை இங்கிருந்து பார்த்துக் கொள்ளவும்: http://www.pcicmp.lk/images/site/questionnaire%20format%20english.pdf

ஆயினும் யுத்த காலத்தில் இடம் பெற்ற மனித உரிமைகள் மற்றும் மனித நேய சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பாக முறைப்பாடுகளை முன்வைக்குமாறு பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது[10] 2014 நவம்பர் மாதம் போன்ற மிக அண்மைக் காலத்திலேயாகும்[11]. எனவே, ஆணைக்குழுவின் முன் தற்போது வருகை தருவோர், காணாமற் போன தமது உறவினர் தொடர்பில் குறிப்பான நிகழ்வுகள் பற்றிய முறைப்பாடுகள் செய்துள்ளோராகும். காணாமற்போனமை தொடர்பில் போதுமான கவனஞ் செலுத்தாது காணாமற் போனவர்கள் பற்றி முறைப்பாடுகள் செய்துள்ளவர்களின் வேறு விடயங்கள் பற்றி விசாரணை செய்தல் ஆணைக் குழுவின் முன் சமூகமளிப்போருக்குச் செய்யும் பெரும் அநீதியாகும். அவ்வாறே காணாமற் போனமை தொடர்பில் பரிகாரம் பெற்றுக் கொள்வதற்கான முன்னெடுப்பாக ஆணைக்குழுவினால் உணரப் பட்டிருப்பதாகக் கூறினும் இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அதன் நம்பகத் தன்மைக்கு தாக்கம் ஏற்படு கிறது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால்[12] இதற்கு முன் வலியுறுத்திய வாறு இத்தகைய விடயங்கள் பெருமளவிலான பிரச்சினைகள் தொடர்பாக விசாரிப்பதற்கு ஏற்றவாறாக ஆணைக்குழுவின் பணிப்பாணையை பரவலாக்குவதால் ஏற்பட்ட எதிர்மறையான விளைவுகளில் ஒன்றாகும்.

பொதுமக்கள் அமர்வுகளின் தன்மையை கருதும் போது, தேவையாயின் **இரகசியமாக சாட்சியளிக்கும் வாய்ப்புக்கள்** உள்ளதென ஆணைக்குழுவினால் தமது சமூகத்துக்கு வருவோருக்கு அறிவிப்பது மிகவும் முக்கியமாகும். இது ஆணைக்குழு 2014ன் ஆரம்பத்தில் நடாத்திய பொதுமக்கள் அமர்வுகளில் அனுசரிப்ப தற்கு இணங்கிய முக்கிய நடைமுறையாகும்.ஆயினும், தற்போது இந்த நடைமுறை படிப்படியாக நடைபெறாத போதிலும்,அனைத்து பொது மக்கள் அமர்வுகளிலும் அவ்வாறே நடைபெறுவதுமில்லை. சாட்சிக்காரரையும் துயருக்குள்ளானோரையும் பாதுகாக்கும் பொறிமுறையொன்று செயற்படாத நிலைமை யில் இந்த விசாரணை நடப்பதனால், ஆணைக்குழுவின் சமூகத்துக்கு வருகை தந்து உணர்ச்சிவசப் படக்கூடிய முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கின்ற தாக்கங்களுக்குள்ளானோர்மிகவும் அபாயகரமான விளைவு களுக்கு முகங் கொடுக்கலாம். சாட்சிக்காரரையும் துயருக்குள்ளானோரையும் பாதுகாக்கும் வலு மிக்க மற்றும் நம்பகத்தன்மை கொண்ட பொறிமுறையொன்றை அறிமுகஞ் செய்யும் சட்டத்தின் தேவை தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மீண்டும் வலியுறுத்துகிறது[13].

## பரந்தளவான பிரச்சினைகள்

2014 யூலை மாதம் ஆணைக்குழுவினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது மக்கள் அமர்வை நடாத்தி முடித்ததன் பின்னர்,1871/18ம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஆணைக்கழுவின் பணிப் பாணை பரவலாக்கப்பட்டது. அது சர்வதேச மனித உரிமைகள் நீதிகளும் சர்வதேச மனித நேயச் சட்ட மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை பற்றித் தேடியறிவதற்காகும். முல்லைத்தீவு மாவட்டத் தில் இடம்பெற்ற பொதுமக்கள் அமர்வுகளின் போது ஆணைக்குழுவினால் வினவப்பட்ட வினாக்களில் தெளிவான மாற்றமொன்றைக் காண முடிந்தது. முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் அமர்வுகளின் போது பெரும்பாலும் 2009ம் ஆண்டு யுத்தகால இறுதிக் கட்டத்தின் போது இடம்பெற்ற காணாமற் போனவை தொடர்பான நிகழ்வுகளே முன்வைக்கப்பட்டன. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் இரு முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் பரவலாக்கப்பட்ட பணிப்பாணை பற்றி தனது அக்கறை யைக் காட்டியது[14].

முதலில், கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைப்பின் பேரிலேயே இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டது. காணாமற் போதல் மற்றும் கடத்தல்களின் பரிமாணமும், உணர்வு பூர்வமான தன்மையின் காரணமாகவும் அதற்கெனவே புறம்பான மற்றும் அர்ப்பணிப்பு செய்யப்பட்ட பொறிமுறை யொன்று அமைக்கப்பட வேண்டுமென்று அந்த ஆணைக்குழுவினால் விசேடமாகப் பரிந்துரைக்கப்பட்டது. காணாமற்போனமைக்கு நேரடியாக சம்பந்தமில்லாத வேறு விசாரணைகள் மூலம் ஆணைக்குழுவின் செயற்பணியைச் சிக்கலாக்குதல், கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைப்புக் களை மாற்றுவது மட்டுமன்றி அது ஆணைக்குழுவின் ஆரம்ப இலக்குகளை **செறிவு குன்றியதாக்கியவாறு ஆணைக்குழுவின் மீது நடைமுறைப்படுத்தவியலாத அளவுக்குச் சுமையேற்றும்** அபாயத்தையும் ஏற்படுத்தும். மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தினால் எழுப்பப்பட்ட இந்த பிரச்சினைகள் தற்போது மெய்யாகி விட்டது. **ஆணைக்குழுவின் முன் உள்ள பாரிய வேலைப்பளுவின் மத்தியில் காணாமற் போன**

---

[10] பொது மக்களுக்கான அறிவித்தல் - பார்க்கவும் http://www.pcicmp.lk/images/Notice%20Extended%20the%20Scope%20-%20English.pdf

[11] ஆணைக்குழுவின் இணைய தளத்தில் பொது மக்களுக்கான அறிவித்தல் 2014 அக்டோபர் 10 திகதி விடுக்கப்பட்டதாக இருந்தபோதிலும் இந்த அறிவித்தல் பொதுமக்களுக்காக விடுக்கப்பட்ட திகதி 2014 நவம்பர் 16 ஆகும். பார்க்கவும் : *Missing Persons Commission to consider Civilian casualties and 'Rule of War'- Whether LTTE was subjected to international humanitarian law,* சனாதிபதி ஊடகப் பிரிவு2014 நவம்பர் 16 ஆகும் பார்க்கவும் http://www.defence.lk/new.asp?fname=Civilian_casualties_and_Rule_of_War_20141116_0212

[12] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கையைப் பார்க்கவும்:http://www.cpalanka.org/concerns-on-the-proceedings-of-the-presidential-commission-to-investigate-into-complaints-regarding-missing-persons/

[13] தற்போது இலங்கையில் சாட்சியாளரை அல்லது துயருக்குற்றோரைப் பாதுகாக்கும் சட்டங்கள் ஏதும் இல்லை. அதற்கான சட்டங்களை இயற்றுவதற்கு பல ஆண்டுகள் பூராவும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அவற்றில் ஒன்றாவது இது வரையில் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படவில்லை.

[14] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை: காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான விசாணைக்குழுவின் பணிப்பாணையைப் பரவலாக்குவது தொடர்பான பிரச்சினைகள் : 2014 யூலை 24ஜப் பார்க்கவும் http://www.cpalanka.org/concerns-on-the-expansion-of-the-mandate-of-the-commission-of-inquiry-to-investigate-into-complaints-regarding-missing-persons/

**வர்கள் பற்றித் தேடிப்பார்த்தல் ஒரு புறமாக ஓரங்கட்டப்பட்டு விட்டது**. ஆணைக்குழுவின் மீது ஏற்கனவே சுமத்தப்பட்டுள்ள மிகைச்சுமையை மேலும் அதிகரித்தவாறு தாக்கங்களுக்குள்ளானோரின் சீவனோபாயத் துக்கு உதவுதல், காணி தொடர்பான முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் ஆலோசனைச் சேவை வழங்குதலுக்கான வேலைத்திட்டம் தயாரித்தல் போன்ற கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைப்புக்கள் தொடர்பாகவும் நவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அண்மையில் அறிக்கைகள் வெளியாகின[15]. இவை யுத்தத்துக்குப் பின்னரான காலத்தில் நல்லிணக்கத்தின் பால் அத்தியாவசியமான தொன்றாக இருந்த போதிலும் அவ்வாறான பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் செயற்படுமளவுக்கு மனித வளங்களோ அல்லது சிறப்பான அறிவோ ஆணைக்குழுவிடம் இல்லை. மாற்று முரண்பாட்டுத் தீர்வுப் பொறிமுறையாக அறிமுகப்படுத்த முடியாவிடின் தனது நிலைமையையும் பணிப்பாணையையும் உறுதிப்படுத்த ஆணைக் குழு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தனது விடயப்பரப்பைப் பற்றி ஆணைக் குழுவுக்கு தெளிவான பணிப்பாணையொன்று கிடைத்திருந்த போதிலும் காணாமற்போனவர்கள் என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ள ஆயிரக்கணக்கானோருக்கு நேர்ந்த கதி தொடர்பாக விடைகளைத் தேடும் ஆணைக்குழுவுக்கு கிடைத்துள்ள முன்னேற்றம் உண்மையிலேயே பிரச்சினைக்குரியதாகும். அதனால், ஆணைக்குழுவின் இலக்கு பல்வேறு திசைகளுக்கு திசைமாறிப் போவதால் தாக்கங்களுக்கு உள்ளான பொது மக்களின் உண்மையான தேவைகளுக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளுக்கு சேதம் விளையக் கூடாது.

இரண்டாவது,**சர்வதேச நிபுணர்களைக் கொண்டமைந்த ஆலோசனைக் குழுவுக்கு (ஆலோசனைச் சபை) தரப்பட்டுள்ள விடய ஆய்வெல்லை விளக்கமின்மை** தொடர்பான கரிசனையும் மாற்று கொள்கை களுக்கான நிலையத்தினால் எடுத்துக் காட்டப்பட்டது. இப்போதைக்கெல்லாம் ஆலோசனைச் சபைக்காக ஆறு பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்[16]. ஆலோசனைச் சபையின் உறுப்பினர்கள் இதுவரையில் ஆணைக்குழு வினால் நடாத்தப்பட்ட ஒரு பொதுமக்கள் அமர்வுக்கேனும் பங்குபற்றாமல் இருந்திருப்பினும் கூட, ஆணைக் குழுவின் பணிப்பாணையைத் திறனாய்வு செய்யும் போது ஆலோசனைச் சபையினால் தமக்கு வழங்கப்பட்ட கருத்துரைகள் “தமக்கு பெருமளவில் பயனுள்ளதாக அமைந்திருந்ததாக ஆணைக்குழு குறிப்பிட்டிருந்தது[17]. இக்கருத்துரைகள் இதுவரையில் பொதுமக்கள் அறியும் பொருட்டு பகிரங்கப் படுத்தப்படாதிருந்த படியினால், ஆணைக்குழுவுடன் ஈடுபடும் போது ஆலோசனைச் சபையின் குறிப்பான பங்கு யாதென்பது குழப்பத்துக்குரியதாகின்றது. ஆலோசனைச் சபையின் பணிப்பாணை மற்றும் கடமை கள் தொடர்பாக இப்போதைய நிலைமையை விடவுமான வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டியதன் தேவை மாற்று கொள்கைளுக்கான நிலையத்தினால் மீளவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில், உண்மை, நியாயம் மற்றும் வகைகூறல் என்பனவற்றைத் தேடியறியும் போது தமது பங்கு யாதென்பதை ஆலோசனைச் சபையினால் சிவில் சமூகத்தையும் பொதுமக்கள் குழாத்தையும் சந்தித்து விளக்கிக் கொடுக்க வேண்டிய தேவையையும் மாற்று கொள்கைகளுக்கான நிலையம் எடுத்துக் காட்டியுள்ளது. வெளிப்படையாகத் தென்படுவது போலவே அனைத்தையும் உள்ளடக்கிய செயற்பாட்டைக் கொண்டு செல்வதன் மூலம், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதியை நிலை நாட்டு வதற்காக நேர்மையாகச் செயலாற்ற முயற்சிக்கும் செயல்முறைக்குச் சேதம் விளைவிக்கும் விதமாக நிறைவேற்று அதிகாரத்தினால் ஆலோசனைச் சபை உபயோகிக்கப்படலாம் என்ற அச்சத்தை அகற்றுவது மட்டுமன்றி தற்போது அனுசரிக்கப்படும் செயல் முறையின்போது அச்சபையின் பங்கு தொடர்பாகவும் விளக்கமொன்றையும் வழங்கும்.

**சாட்சிகளையும் துயருக்குற்றோரையும் பாதுகாக்கும் பொறிமுறையொன்றில்லாமை**, தொடர்ந்தும் நிலவுகின்ற ஒரு கரிசனையாகும். பொதுமக்கள் அமர்வு வெளிப்படைத்தன்மையுடன் இருத்தல் வேண்டும் என்பதையும் அவை பகிரங்கமாகவே நடாத்தப்படவேண்டும் எனக் கூறும் ஆணைக் குழு, அவ்வாறான பொதுமக்கள் அமர்வுக்காக அவசியப்படும் பாதுகாப்பை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளது. வடக்கில் பெரு மளவில் இராணுவம் நிலைகொண்டிருப்பதும்,சாட்சிகளையும் துயருக்குற்றோரையும் பாதுகாக்கும் பொறியொன்றில்லாமையும் இவ்வாறான சூழமைவில் பிரச்சினைக்குரியதொன்றாகும். பொதுமக்கள் அமர்வு கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களிலும் அதற்குப் புறம்பாகவும் இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு அதிகாரிகளினால் இடையூறுகள் மேற்கொள்ளப்பட்ட சில தருணங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டு இருந் திருப்பினும் அவை மீண்டும் நிகழாதவாறு எவ்விதமான நடவடிக்கையையும் ஆணைக்குழு எடுக்கவில்லை. சில சந்தர்ப்பங்களில் சிவிலியன் உடைகளணிந்த பாதுகாப்பு அதிகாரிகள் பொதுமக்கள் அமர்வுகளில் சமூகமளித்து அவற்றில் கலந்து கொண்டு முறைப்பாடுகளை முன்வைப்போரை மிகவும் கவனமாகக் கண்காணித்து அவர்களை படம் எடுத்துமுள்ளனர்[18]. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கர வாத விசாரணைப்பிரிவினால் காணாமற்போனவர்களின் குடும்பங்களின் வீடுகளுக்கு வீடுகளுக்கு விஜயம்

---

[15]*Missing Persons Commission has acted promptly to deal with complaints,* டெய்லி நியூஸ், 2014 டிசம்பர் 2. இங்கிருந்து பெறுக http://www.defence.lk/new.asp?fname=Missing_Persons_Commission_has_acted_promptly_to_deal_with_complaints_20141202_01

[16]ஸ்ரீமான் டெஸமண்ட த சில்வா QC (தவிசாளர்); ஸ்ரீமான் ஜொ.ஃப்ரி நீஸ், QC; பேராசிரியர். டேவிட் கிரேன், அவ்தாஷ் கௌஷல் அவர்கள், அஹ்மத் பிலால் சூ.ஃபி அவர்கள், மூத்துா நொகூச்சி அவர்கள்

[17] *நிபுணர் குழுவுக்கும் காணாமற்போனவர்கள் பற்றிய ஆணைக்குழுவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறல்(Expert Panel and Missing Persons Commission hold discussion),* சனாதிபதி ஊடகப் பிரிவு, 2014 அப்டோபர் 20. இங்கிருந்து பெற்றுக் கொள்ளவும் http://www.defence.lk/new.asp?fname=Expert_Panel_and_Missing_Persons_Commission_hold_discussion_20141020_01

[18]மாற்றும் கொள்கைகளுக்கான நிலைய அறிக்கையைப் பார்க்கவும் : http://www.cpalanka.org/concerns-on-the-proceedings-of-the-presidential-commission-to-investigate-into-complaints-regarding-missing-persons/

செய்து அல்லது அவர்களுடன் தொடர்பு கொண்டு காணாமற் போன வர்களைப் பற்றி விசாரித்துள்ளதுடன் சில சந்தர்ப்பங்களில் ஆணைக்குழு முன் அவர்கள் சமர்ப்பித்த முறைப்பாடுகள் பற்றியும் விசாரித்துள்ளனர்[19]. சிலநேரங்களில், ஆணைக்குழு முன்சென்று முறைப்பாடு செய்யுமாறும் காணாமற் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தோரை ஊக்குவித்து, அவர்கள் பொது மக்கள் அமர்வுகள் நடக்கும் இடங்களுக்குச் செல்வதற்காக அரச பாதுகாப்புப் பிரிவினரால் போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டு முள்ளன[20]. அதேநேரம் சில சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அமர்வுகளில் கலந்து கொள்ளா மலிருக்கும்படி அக் குடும்பங்களின் உறுப்பினர்கள் பயமுறுத்தப்பட்டுமுள்ளனர்[21]. இந்த ஆணைக்குழுவைத் தவிர வேறு இடங்களில் பதிவுசெய்யப்பட்டோ அல்லது அறிக்கைப்படாதோ உள்ள காணணாமற் போனவர்கள் தொடர்பான சில நிகழ்வுகள் பற்றி குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் பயங்கரவாத விசாரணைப் பிரி வும் அறிந்திருந்தமையும் தெரிய வந்துள்ளது[22]. குறிப்பாக இராணுவமயப்படுத்தப்பட்ட நிலைமை வடக்கில் நிலவுகையில் மற்றும் யுத்தகாலத்தில் இடம் பெற்ற அக்கிரமங்கள் பற்றிய உண்மையைத் தேடுவோர் பழி வாங்கப்படுவோர் என்ற அச்சம் நிலவுகையில்இந்த அளவிலான தலையீடுகளும், பயமுறுத்தல்களும், கடுங்கண்காணிப்புக்களும் இடம்பெறுவதால் மிகவும் உணர்ச்சிமயமான விடயங்களைத் தேடிப் பார்க்கும் ஆணைக்குழுவொன்றின் நடவடிக்கைளுக்கு நன்மைதரப்போவதில்லை. 2013 ஆகஸ்ட் 13ந் திகதி ஆணைக்குழு நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை ஓராண்டுக்கும் அதிகமான காலம் கழிந்துவிட்டது. இருப்பி னும் **விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகளின் நிலைமை இதுவரையில் காலத்துக்கேற்ற விதமாகப் புதுப் பிக்கப் படவில்லை.** வருடத்துக்குள் இடைக்கால அறிக்கையொன்று வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டாலும் இதுவரையில் அவ்வாறான அறிக்கையொன்று பகிரங்கப்படுத்தப்படவில்லை. தமது முறைப்பாடுகளின் நிலைமை குறித்து அறிந்து கொள்வதைப்போலவே, உண்மையையும் நியாயத்தையும் தேடியறியும் முயற்சியில் தாம் எதிர்ப்பார்ப்பது யாது என்பதை ஆணைக்குழுவிடம் முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தவர் களுக்கு உரிமையுண்டு.

## உணர்ந்தறியப்பட்டவையும் கவனத்திற்கெடுத்துக் கொள்ள வேண்டியவையும்

தமக்குக் கிடைத்த நிவாரணம் யாதென காணாமற்போன தன் மகனைத் தேடிக் கொண்டிருந்த தாயிடம் கேட்டபோது அவள் தந்த பதில்,''*எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை; எனக்கு ஒன்றும் தேவையுமில்லை; ஆனால் எனக்கு என் மகன் வேண்டும்*''என்பதாகும்[23].ஆணைக்குழுவின் முன்னிலையில் அவ்வாறான உணர்ச்சிபூர்வமான வார்த்தைகள் அடிக்கடி கேட்க நேரிடுகின்றன. அவ்வாறான வார்த்தைகள் கேட்கப் படும் தடவைகளுக்கமைய விளங்கும் விடயம் யாதெனில் காணாமற்போனோர் குடும்பங்களின் **பெரும் பாலானோர் ஆணைக்குழுவின் முன்வருவது உண்மையைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்தினாலா கும்.**'நியாயமான நிவாரணம் கிடைத்துள்ளதா என விசாரணை செய்வது ஆணைக்குழுவின் பணிப்பாணையின் கீழ் இடம் பெறவேண்டியதொன்றாக இருந்தபோதிலும் அநேகமானோர், தமது அன்றாடக் கூலியையும் அர்ப்பணித்தவாறு நெடுந்தூரம் பயணித்து வருவது தமது வினாக்களுக்கு விடையைத் தெரிந்து கொள் ளும் நோக்கத்தினாலாகும். காணாமற்போன தனது உறவினரைத் தேடித்தருமாறு அவர்களது உற வினர்கள் ஆண்டுகள் பல கழிந்த போதிலும் ஆணைக்குழுவை வற்புறுத்திக் கேட்பது அவர் கள் இன்னமும் உயிருடன் இருப்பதாக தாம் நம்புவதனாலேயாகும்.பல தசாப்தங்களாக தடுப்புக் காவல் நிலையங்களில் இருந்து மீண்டவர்கள் பற்றிய அறிக்கை அண்மையில் வெளியானதைத் தொடர்ந்து காணாமற்போன[24] தமது உறவினர்களும் என்றாவது ஒருநாள் மீண்டு வருவர் என்ற நம்பிக்கையில் உள் ளோருக்கும் அது பற்றிய எதிர்பார்ப்புக்களை வைத்துக் கொள்ள முடியுமாக உள்ளது. சமய அனுட் டானங்களைச் செய்து இது பற்றிய முடிவைக்காண்பதற்காவதுகுறைந்தபட்சம் தமது உறவினர்களின் உட லையாவது தேடித்தருமாறு இன்னும் சில சந்தர்ப்பங்களில் அக்குடும்பங்களின் உறவினர்கள் ஆணைக் குழுவின் முன் மேன்முறையீடு செய்துள்ளனர். இதற்கமைய, அவர்களது கோரிக்கைக்குச் செவி மடுத்து, விடைகளைத் தேடுவதற்காக அவர்களுக்குள்ள குறிப்பான தேவைகளுக்குப் பரிகாரம் தேடுவதில் ஆணைக்குழுவின் முன்னுரிமை முழுமையாக இருத்தல் வேண்டும்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் ஆணைக்குழுவிடம் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருக்கிறார் கள் என்பதை தமக்குக் கிடைக்கும் பெருமளவிலான முறைப்பாடுகளின் தொகை சான்றுபகர்வதாக ஆணைக்குழு மீண்டும் மீண்டும் உறுதியாகக் கூறுகிறது. இந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் வருவோருள் அதிகமானோர் இதற்கு முன்னரும் வேறு எத்தனையோ ஆணைக்குழுக்களுக்குச் சென்றும் அதனால் நன்மை ஒன்றும் விளையவில்லை. பெரும்பாலான நிகழ்வுகளில் உறவினர்களால் காவல் துறைக்கு, தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு முறைப்பாடுகள் செய்திருந்த போதும் காணாமற்போன தம் உறவினர்கள் எங்கிருக்கின்றார்கள் என்பது தொடர்பில் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்துமாவது உண்மையை அறிய முடியவில்லை.

---

[19] அடிமட்டத்தில் உள்ள சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் மாற்றுக் கொள்கைக்கான நிலையம் நடாத்திய நேர்காணல்கள். இச்செயற்பாட்டாளர் மத்தியில் சிலர் காணாமற்போனோரின் குடும்ப உறவினர்கள் சார்பில் ஆணைக்கழுவுக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

[20] 2014 செப்டம்பர் மாதம் கிளிநொச்சி மாவட்ட பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவில் இடம்பெற்ற பொதுமக்கள் அமர்வில் முறைப்பாடுகள் சமர்ப்பித்த சிலருக்கு அமர்வுகள் இடம்பெறும் இடத்துக்கு வெளியில் இலங்கை அரசாங்கத்தின் இராணுவத்தின் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படுவதைக் காணமுடிந்தது.

[21] 2014 ஆகஸ்ட் மாதம் ஆணைக்குழுவினால் மன்னாரல் இடம்பெற்ற அமர்வின் போது சிவில் சமூக உறுப்பினரால் இப்பிரச்சினை எழுப்பப்பட்டது.

[22] வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிவில் சமூக மற்றும் மக்கள் குழாம்களிலிருந்து கிடைக்கப்பபெற்ற தகவல்களின் அடிப்படையில் அமைந்ததவை.

[23] மாந்தை மேற்குப் பிரதேசத்தில் நடைபெற்ற பொது மக்கள் அமர்வின் போது. 2014 ஆகஸ்ட் 09.

[24] *Long thought dead, man returns home after 25 year detention,*த சண்டே டைம்ஸ், 2014 டிசம்பர் 14, இங்கே பார்த்துக்கொள்ளவும் : http://www.sundaytimes.lk/141214/news/long-thought-dead-man-returns-home-after-25-year-detention-132458.html

பொது மக்கள் அமர்வுகளினிடையே பல பேர் இதனைப் பற்றிக் குறிப்பிட்டவாறு அவ்வாறான செயல் முறையின் பயனின்மை குறித்து ஆணைக்குழுவிடம் உணர்ச்சிவசப்பட்டு கேட்டிருக்கின்றனர். தமது உற வினர்களைத் தேடியவாறு உள்ளோரின் அவ்வாறான உண்ச்சிமயமான கூற்றுக்கள் மூலம் நிலைமையின் பாரதூரமான தன்மை வெகுவாக விளங்குகிறது. தாக்கங்களுக்குள்ளான ஆயிரக்கணக்கானோர் அனுப வித்த மன உளைச்சல்கள், முறையீடுகளுக்கு தீர்வை வழங்குவதில் அரசாங்கம் உண்மையாகவே ஒத்து ழைப்பை வழங்காமை,தீர்வு வழங்குவதில் கடப்பாடுடைய இதற்கு முன் இருந்த நிறுவனங்களின் போலித் தன்மை, விசாரணை செய்து பரீட்சித்தபின் குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டிய நிறுவனங்கள் தமது கடமையைச் செய்தல் தொடர்பாக அவர்களுக்குத் தண்டனை வழங்காத கலாசாரமொன்று கட்டியெழுப் பப் பட்டுக்கொண்டிருத்தல் என்பன அவற்றுள் அடங்கும். அரசாங்கத்தினாலும் ஆணைக்குழுவினாலும் எவ் வாறுதான் பொருட்கொண்டாலும் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளில் அதிகமானவை தமது **உறவினர்களை தேடிக் கண்டுபிடிப்பதற்காகதற்போதுள்ள அனைத்து முறையியல்களையும் பொறி முறை களையும் ஈடுபடுத்துவது தேவையுள்ளவரின் அவசியத்துக்கமையவே** என ஊகித்துக் கொள்ளலாம்.

**ஆணைக்குழுவினால் உபயோகிக்கப்படும் வினாக்கொத்து உள்ளார்ந்த ரீதியாகவே பாரபட்சமானது என்பதை**[25] மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இதற்கு முன்னரும் குறிப்பிட்டிருந்தது. ஆணைக்குழு வினால் முன்வைக்கப்படும் தலைமை வினாக்கள் வாக்குமூலத்தில் செல்வாக்கு ஏற்படுத்தக்கூடிய ஆற்ற லைக் கொண்டுள்ளதுடன் அதனைத் தொடர்ந்து கண்டறிந்தனவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய வாறு அமைக்கக் கூடியன.பாரபட்சமின்றியும்சுயாதீனமாகவும் செயற்படுதல் ஆணைக்குழுவின் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாததாகும். மேலும், சில சந்தர்ப்பங்களில், துயருக்குள்ளாளானவர் காணாமற்போன விதம் தொடர்பாக வினவப்பட்டுக்கொண்டிருக்கும்போது காணாமற்போனவர் இறுதியாக இலங்கை அரசாங் கத்தின் இராணுவத்திடம் சரணடைந்தபோதே காணப்பட்டதாக சாட்சியாளர் கூறினார் எனின் அத்துடனேயே ஆணைக்குழுவின் வினவலும் நிறுத்தப்படுவதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவதானித் துள்ளது. இதற்கு மேலதிகமாக சீவனோபாய உதவிகள் தொடர்பான கேள்விகளைக் கேட்க ஆணைக்குழு அக்கறை காட்டியதாகவும் காணாமற்போன தம் உறவினர்கள் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக் குள் உள்ள பிரதேசமொன்றில் கண்டதாகச் சாட்சியாளர் ஆணைக்குழுவிடம் தெரிவிக்கையில் அதனை ஓரளவுக்கு அலட்சியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவதானித்திருந்தது.

கேள்வி கேட்கப்படும் விதத்தைப் போலவே, ஒரு சில வாக்குமூலச் சான்றுகளுக்கு **காணாமற் போனவர் களின் உறவினர்களுடைய முறையீடுகள் தொடர்பில்** ஆணைக்குழு காட்டும் துலங்கலும் கூட **உணர்ச்சி மயமானதாகவே இல்லை.**

வினாக்கொத்து தொடர்பில் பிரச்சினை எழும் சந்தர்ப்பங்கள் பற்றி பொது மக்கள் அமர்வுகள் இரண்டி லிருந்து எடுக்கப்பட்ட உதாரணங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன :

காணாமற்போன தன் கணவரைத் தேடும் மனைவியின் சாட்சியத்திலிருந்து முதலாவது கூற்று எடுக்கப் பட்டுள்ளது[26] :

*காணாமற்போனவரின் மனைவி :…… என் கணவரை ஓமந்தை இராணுவ முகாமில் கண்டதாக அவரைக் கண்டவர்கள் சிலர் வந்து கூறினார்கள். அந்த முகாமினுள் வேலை செய்த நிறைய பேர் இருந்தார்கள். அவர்களும் வந்து என கணவரைக் கண்டதாகச் சொன்னார்கள்…..(ஆணைக் குழுவினால் வினா ஒன்று கேட்கப்படுகிறது) அவர் எல்.ரீ.ரீ.ஈ. முகாமில் இருந்து தப்பி வந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத் துக்கு வந்தார்…..(ஆணைக் குழுவினால் வினா ஒன்று கேட்கப்படுகிறது) நான் என் கணவரைத் தேடி வன்னிப் பிரதேசத்தின் எல்லாப் பகுதிக்கும் போயிருக்கிறேன். எல்லோரும் எனக்கு அதற்குச் சமானமான தகவலையே சொன்னார்கள்.*

*ஆணைக்குழுவிலிருந்து : உங்களுக்குக் கிடைத்திருக்கும் உதவிகளைப் பார்க்கும் போது இந்த ஆணைக்குழுவின் தவிசாளராக நீங்கள் வந்திருக்கலாம்.*

காணாமற்போன தன் மகளைத் தேடும் தாயின் சாட்சியத்திலிருந்து எடுக்கப்பட்ட இரண்டாவது கூற்று[27]:

*காணாமற் போனவரின் தாய் : நாங்கள் ஓடிக் கொண்டிருக்கும் போது அவர் காணாமற் போனார்.*
*ஆணைக்குழுவிலிருந்து : அதாவது நீங்கள் ஓடிக் கொண்டிருக்கும் போது மகளுக்கு என்ன நடந்தது என்று பார்க்கவில்லை அப்படித்தானே? மகள் உங்களுடன் வருகிறாரா என்று பார்க்கவில்லை அப்படித் தானே ? மகளும் உங்களுடன் ஓடிவருகிறாரா என்று பார்க்கவில்லை அப்படித் தானே ?*

[25] CPA யின் கூற்று கிடைப்பது :http://www.cpalanka.org/concerns-on-the-proceedings-of-the-presidential-commission-to-investigate-into-complaints-regarding-missing-persons/
[26] 10/08/2014. மன்னார் அமர்வுகளின்போது
[27] 27/09/2014 முழங்காவில் அமர்வுகளின்போது

**யுத்த காலத்தின் போது உள்ள நிலைமை, அவர்கள் பெற்ற அனுபவம் அவர்களின் உறவினர்கள் காணா மற் போன பின்னணி தொடர்பாக ஆணைக்குழுவைப்போலவே சில சந்தர்ப்பங்களில் மொழிபெயர்ப்பாளர் கள் கூட அந்தளவுக்கு பச்சாத்தாபத்துடனும் புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ளவில்லை.** மேலும் தம் மைச் சந்திக்க வரும் நபர்களிடம் வினாக்களைக் கேட்க முன்னர் ஆணைக்குழுவினரால் ஊகங்களையும் கருத்தேற்றங்களையும் ஏற்கனவே ஏற்படுத்திக் கொண்டமையை மேலே உள்ள வினாக்கொத்து எடுத்துக் காட்டுகிறது.

பொது மக்கள் அமர்வுக்காகப் பங்குபற்றுவோரின் ஆண் பெண் பால்நிலைச் சமத்துவம் தொடர்பாகக் கவனத்தில் கொள்வதும் முக்கியமாகும். **காணமற்போனோரில் பெரும்பாலானோர் ஆண்கள் என்பதையும் முறைப்பாடுகள் செய்வோரில் பெரும்பாலானோர் பெண்கள்** என்பதையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அவதானித்துள்ளது. எனவே **ஆண் பெண் பால்நிலை தொடர்பாக உணர்வுபூர்வமான விதத்தில் வினாக்களையும் முறையியலையும்**அமைப்பதற்கான தேவையுள்ளது. காணாமற்போனோரின் பெரும் பாலான குடும்பங்களின் உழைப்பாளிகள் இல்லாமற்போயுள்ளதுடன் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பெண்கள் தலைமைவகிக்கும் குடும்பங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

சில நிகழ்வுகளின் போது, இந்த பன்முகத்தன்மையைப் பற்றிய புரிந்துணர்வோஅல்லது உணர்வு பூர்வமாகவோ இல்லாத நிலையில் ஆணைக்குழு நடந்து கொண்டிருப்பது தெரியவந்ததுடன் குறிப்பாக எவ்விதமான நிதியுதவியோ அல்லது வருமான உழைப்புமில்லாத ஒரு உறுப்பினரை மட்டுமே கொண்ட குடும்பங்கள் தொடர்பாக இந்த நிலைமையைக் காண முடிந்தது.மேலும் **பொது மக்கள் அமர்வுகளின் போது சமூகமளித்து விடயங்களை முன் வைப்பதற்காக வரும் காணாமற்போனோரின் குடும்பங் களுக்கு எவ்வித உதவியும் கிடைப்பதில்லை.** நாட்பூராவும் பொது மக்கள் அமர்வுக்குச் சமூகமளித்த வாறு முறைப்பாடு களைச் சமர்ப்பிக்கும் அவர்களுக்கு நாளின் உழைப்பை அர்ப்பணிக்க வேண்டியிருப்பதால் அவர்களது சீவனோபாயத்துக்கு அதன் மூலம் தாக்கம் ஏற்படுவதனால் ஆணைக்குழு அது தொடர்பாக எவ்வித முக்கியத்துவத்தையோ அல்லது உதவியோ தருவதில்லை.

விசாரணைகள் நடாத்தப்பட்டிருப்பின் அவற்றின் நிலைமையும் பிரச்சினைக்குரியதே. இதுவரையில் ஆணைக்குழுவுக்கு 20,000 அளவு முறைப்பாடுகள் கிடைத்துள்ள போதிலும் எவ்வித விசாரணையும் தற்போது இடம் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு கேட்டுக் கொள்வ தற்காக ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் சனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்ததாக ஊடக அறிக்கைகள் தெரிவித்தன[28]. ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளுள் கணிசமான அளவு இலங்கை அரசாங்கத்தின் இராணுவத்துக்கு எதிரான முறைப்பாடுகளாக இருப்பதால், நிறைவேற்று அதிகாரத்தினால் நியமிக்கப்படும் குழுவுக்குச் சுதந்திரமாக இயங்க முடியுமா என்ற பிரச்சினை இங்கு எழுகின்றது. மேலும்,'விசாரணை' என்பதன் மூலம் ஆணைக் குழு குறிப்பாக எதனை கருத்தில் கொண் டுள்ளது என்பது தொடர்பாக விளக்கமுமில்லை. விசாரணையொன்றின் போது, குறைந்தபட்சம், இலங்கை அரசாங்கத்தின் தடுப்புக் காவல் நிலையங்களின் நிலைமை, யுத்தகால ஆஸ்பத்திரி அறிக்கைகள், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் முகாம்களின் பதிவேட்டு அட்டவணை மற்றும் புனருத்தாபன நிலையங் களின் பதிவேட்டு அட்டவணை முதலானவற்றைப் பரீட்சிப்பது அவசியமாகும்.

எவ்வாறாயினும் அதனையும் விட ஆழமாக விடயங்களைத் தேடிப்பார்ப்பதே காணாமற்போனவர்களின் குடும்பங்களின் எதிர்ப்பார்ப்பாகும்[29]. காணமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை உறுதியாக அறிந்துகொள்வதற்காக ஆணைக்குழுவினால் ஒவ்வொரு நிகழ்வுகளையும் வெவ்வேறாக விசாரணைக்குட் படுத்தி அவர்கள் இறுதியாகக் காணப்பட்ட இடங்கள் தொடர்பாக மேலும் விசாரித்து, அவர்கள் இன்னமும் உயிரோடிருப்பின் அவர்கள் இருக்கும் இடங்கள் பற்றி தமக்கு அறிவிக்க வேண்டுமென்பதே குடும்ப உறவினர்களின் எதிர்பார்ப்பாகும்.எனவே விசாரணை நடவடிக்கைகளை நிகழ்த்தும் திட்டத்துக்கு ஆணைக்குழு முன்னுரிமையளித்தல் வேண்டும். முதலாம் சுற்றில் பொது மக்கள் அமர்வுகளை நடாத்தி ஒரு வருட காலம் கடந்துள்ள போதிலும், ஆணைக்குழுவினால் இன்னமும் விசாரணைக் குழுவொன்றை இனங்காணவோ அல்லது முறைப்பாடுகள் தொடர்பாக உண்மையாகவே தேடிப்பார்த்தலை ஆரம்பி யாதிருத்தல் ஓரளவுக்கு கவலைக்குரிய விடயமாகும்.

சிவில் சமூகம், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டு தூதுவராலயங்கள் மற்றும் ஊடகவியலாளரைச் சந்தித்தல் தொடர்பாக ஆணைக்குழு தொடர்ந்தும் வெளிப்படையாக செயற்பட்டாலும் அவர்களால் எழுப்பப்படும் பிரச்சினைகள் தொடர்பாக செயற்படுதலோ அல்லது அவற்றுக்கான பரிகாரம் காண்பதோ மிகவும் குறைந்த பட்சமாகவே இடம் பெறுகிறது. ஆணைக்குழுவின் உண்மையான தேவை மற்றும் அதன் இலக்கு யாதென்பது நியாயமான ஒரு பிரச்சினையாகும். உண்மையைத் தேடிப்போகும்

[28] *'Form Team to Probe SL Disappearances'*, த நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், 2014 செப்டெம்பர் 14, இங்கிருந்து பெற்றுக் கொள்ளவும் http://www.newindianexpress.com/world/Form-Team-to-Probe-SL-Disappearances/2014/09/29/article2454409.ece

[29] விடயங்களைச் சமர்ப்பிக்க வந்த அநேமான குடும்பங்கள் இப்போதைக்கு தமது உறவினர்கள் தடுப்பு முகாம்களில் இருக்கின்றனரா என்பதை தேடிப்பார்த்துள்ளதுடன் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் முகாம்களுக்குச் சென்று அங்குள்ள பதிவேட்டு அட்டவணைகளையும் ஆஸ்பத்திரி அறிக்கைகளையும் கூட பரிசீலித்துள்ளனர். ஆணைக்குழு அமர்வுகளுக்கு வருகை தந்ததன் மூலம், தேடிக்கொள்ள முடியாமற் போன தகவல்களை அல்லது அவர்களுக்கு டீதடிக் கொள்ள முடியாதவற்றுக்கும் அப்பால் உள்ள தகவல்களை அறிந்து கொள்வதே அவர்களது நோக்கமாக உள்ளது.

போது **உண்மையான முறையீடுகளுக்குப் பரிகாரம் காண்கையில் தற்போதையதை விடப் பரந்தளவான உரையாடலை** உடனே செயலுக்கு முற்படுத்த வேண்டிய நடவடிக்கையாகக் கருதி ஆரம்பித்தல் வேண்டும். யுத்தத்தின் தாக்கங்களுக்கு உள்ளான பொதுமக்களுடன் பல ஆண்டுகளாக செயலாற்றியுள்ள சிவில் சமூகங்களுக்கு இது தொடர்பில் ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் வழங்க ஆற்றலுண்டு.

உண்மையைத் தேடிச் செல்லுதலும் நியாயமும் யுத்தத்தில் தாக்கங்களுக்கு உள்ளானோருக்கு மிக முக்கியமான விடயங்களாக இருப்பதுடன் ஆணைக் குழு இந்த அவசியத்தை மறந்துவிடல் கூடாது. தாக்கங்களுக்கு உள்ளான பொது மக்களின் தேவைகளுக்கு பரிகாரங்கள் கிடைப்பதாக உறுதி செய்தலும் இலங்கையின் நீண்டகால நல்லிணக்க செய்றபாட்டுக்கு வசதிகளை வழங்கும் விதமாக பிரச்சினைகளுக்குப் பரிகாரங்களை ஏற்படுத்துவதற்கு உண்மையாகவே முயற்சிகள் உள்ளன என்பதைக் காட்டுவதற்காக இக்குறிப்பில் முனைப்புறுத்திக் காட்டப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்குமாறு மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஆணைக் குழுவையும் சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்களையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.